# வைரமுத்துவின் புதினங்கள் பழமொழி எனும் படைப்பாக்க உத்திப்பயன்பாடு

**முனைவர் சோ.தண்டபானி**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக்கல்லூரி, திண்டுக்கல்

---

## முன்னுரை

செவிவழியாகத் தொடங்கி எழுத்திலக்கியமாகத் தோற்றம் பெற்ற இலக்கிய வடிவம் என்றால், அது கதைகூறும் இலக்கிய வடிவமான புதின இலக்கிய வகையே ஆகும். இவ்விலக்கிய வடிவம் மனித வாழ்வோடு பன்னெடுங்காலமாகத் தொடர்பிலிருக்கும் ஒரு கலைக்கூறாகும். சங்க இலக்கிய அகப்பாடல்கள் சிறு சிறு கதை நிகழ்வுகளாக அமைந்து படிப்பவர் உள்ளத்தில் பலவிதமான உணர்வுகளை எழுப்பி இன்பமுறச் செய்தன. அதனால் அவை இன்றும் நிலைத்து நிற்கின்றன. அவ்வாறு படிப்பவர் உள்ளத்தில் தாம் சொல்ல வரும் கருத்து நிலைத்து நிற்பதற்கும், தெளிவாக உணர்ந்து கொள்வதற்கும் சங்கப் புலவர்கள் தொடங்கி இன்றுள்ள படைப்பாளர்கள் வரை பல்வேறு உத்திகளைக் கையாளுகின்றனர். அவ்வுத்திகளில் பழமொழியும் ஒன்று. கவிஞர் வைரமுத்து தன்னுடைய புதினங்களில் பழமொழி என்னும் உத்தியைப் பயன்படுத்தியுள்ளதைப் பற்றி இக்கட்டுரை எடுத்துக்கூறுகின்றது.

## உத்தி - விளக்கம்

தமிழ் இலக்கிய மரபில் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் தோன்றிய படைப்புகள் தாம் கூற வந்த செய்தியை வெளியிட்ட ஒரு குறிப்பிட்ட உத்தியையோ அல்லது பல்வேறு உத்திகளையோ பயன்படுத்துவதுண்டு. இவ்வுத்திகள் படைப்பின் தரத்தை உயர்த்துவதாக அமைதல் வேண்டும். அத்தகைய உத்திகளைப் பற்றி நன்னூலார்,

**“நுதலிப் புகுதல் ஓத்து முறை வைப்பே**
**தொடுத்துச் சுட்டல் வகுத்துக் காட்டல்**
**முடித்துக் காட்டல் முடிவு இடம் கூறல்**
**.......................................................................**
**.....................................................................**
**ஒன்றினம் முடித்தல் தன்னினம் முடித்தல்**
**உய்த்து உணர வைப்பு என உத்தி என் நான்கே”[1]**

என்ற நூற்பாவின் மூலம் 32 உத்திகள் நூலில் பயன்படுத்தப்படுவதைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

‘ஒத்த காட்சி உத்தி வகை விரிப்பின்’ என்பது தொல்காப்பியம். இதற்கு இளம்பூரணர் **“**உத்தியை அது சூத்திரத்தின் பாற் கிடப்பதோர் பொருள் வேறுபாடு காட்டுவது**”**[2] என விளக்குகிறார்.

ஒரு படைப்பாளனின் படைப்பு சிறப்பதற்கும், வாசகர் மனதில் நீங்கா இடம் பெறுவதற்கும் இவ்வுத்திகள் மிகவும் இன்றியமையாததாகின்றன.

## பழமொழிகள்

‘பழமொழி என்ற சொல்லே நமக்கு அதன் பொருளை உணர்த்தி நிற்கின்றது. பழமொழி என்பது வாய்மொழி இலக்கியமான நாட்டுப்புற இலக்கியத்தின் ஒரு பகுதியாகும். இது நாட்டுப்புற மக்களின் அனுபவ மொழியாக விளங்குகின்றது. பழமொழிகள் தாம் கூற வந்த அழுத்தமான கருத்துக்களால் அவர்களின் மனக்குறிப்பை நமக்குச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்றது.

**“நுண்மையும் சுருக்கமும் ஒளியும் உடைமையும்**
**நுண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்**
**குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்**
**ஏது நுதலிய முதுமொழி”**[3]

என்ற தொல்காப்பிய நூற்பாவின் வழி அவர் காலத்திலேயே பழமொழிகள் வழக்கத்திலிருந்தது தெரியவருகின்றது.

கவிஞரின் புதினங்கள் தேனி மாவட்டத்தையும் அதனைச் சுற்றியுள்ள கிராமப்புறங்களையுமே கதைக் களமாகக் கொண்டுள்ளதால் அப்பகுதி மக்களிடையே வழக்கத்திலுள்ள பழமொழிகள் புதினங்களில் அதிகமாகக் கவிஞரால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இப்பழமொழிகள் புதினங்களில்

1. விவசாயம் சார்ந்தது
2. சமூகம் சார்ந்தது

என இரண்டு வகையாகப் பாகுபடுத்தப்படுகிறது.

## 1. விவசாயம் சார்ந்தது

வேட்டைச் சமூகமாகத் தன் வாழ்க்கையைத் தொடங்கிய மனித சமூகம் பின் வேட்டைக்குப் பயன்படுத்திய விலங்குகளை வைத்து விவசாயச் சமூகமாக அவர்கள்

வாழ்க்கை பரிணமிக்கத் தொடங்கியது. அதன்பின் தான் நாகரீகம் வளர்ந்தது. பண்டமாற்று முறை வளர்ந்தது. அதன் விளைவே இன்று ஏற்றுமதி, இறக்குமதி என்ற நிலையில் மையம் கொண்டது.

**“தை ஒழவு அய்யாட்டுக் கெடைடா”**

**(க.கா.இ.ப. 18)**

தாவரங்களுக்கு எவ்வளவு தான் உரம் போட்டாலும் நிலத்திற்கு ஆட்டுப்புழுக்கையும், கோமியமும் சேர்ந்தா பொட்டல்காடு கூட பொன் விளையும் பூமியாக மாறிவிடும். அவ்வாறு ஐந்து ஆட்டுக்கெடா வச்சா என்ன ஊட்டமோ அப்படியொரு ஊட்டம்தான் தைமாதம் உழுகும் உழவுக்கு என்பது பழமொழியின் பொருள்.

**“நண்டுர நெல்லு**
**நரியோடக் கரும்பு**
**வண்டியோட வா(ை)ழ**
**தேரோடத் தென்ன”**

**(க.கா.இ.ப. 7)**

விவசாயம் தெரிந்திருந்தாலும், விவசாயம் செய்தாலும் மட்டும் பத்தாது. ஒரு செடியை எந்த அளவிற்கு இடைவெளிவிட்டு நட வேண்டும் என்பதையும் விவசாயப் பெருங்குடிகள் அறிந்திருந்தனர். அந்த அனுபவத்தையும் அவர்கள் பழமொழியாக்கிப் பத்திரப்படுத்திக் கொண்டனர். நெல்லு நட்டால் இரண்டு நாற்றுக்கும் மத்தியில் நண்டோடனும். கரும்பு நட்டா இரண்டு கரும்புக்கும் இடையில் நரி ஓட வேண்டும். வாழை நட்டால் இரண்டு வாழைக்கும் இடையில் வண்டியோட வேண்டும். தென்னை நட்டால் இரண்டு தென்னைக்கும் இடையில் தேரோட வேண்டும் என்பதே நாற்றுக்காண இடைவெளிக் கணக்கு.

**“தென வெதைச்சாத் தென அறுக்கனும் வென வெதைச்சா வென அறுக்கனுமில்ல”**

**(க.கா.இ.ப. 154)**

நாம் எப்பொழுதும் மனதில் நல்ல் எண்ணங்களையே கொண்டிருக்க வேண்டும். நாம் பிறருக்கு என்ன செய்ய எண்ணுகின்றமோ அச்செயலே நமக்கும் நடக்கும் என்பதே இப்பழமொழியின் பொருள்.

**“பனமரம் வச்சவன் பாத்துகிட்டே சாவானாம்; தென்னமரம் வச்சவன் தின்னுட்டுச் சாவானாம்”**

**(க.கா.இ.ப. 256)**

தென்னை மரம் நட்டு வைத்து இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் காய்ப்புக்கு வந்து விடும். அதனால் அதன் பயனை இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் நாம் பெற முடியும். ஆனால் பனைமரம் 30m உயரம் வரை வளரக் கூடியது. பனை மரம் நட்டு வைத்துப் பத்து ஆண்டுகள் ஆனபின் தான் 15m வரை வளரும். அது காய்ப்புக்கு வருவதற்கு எப்படியும் 15 அல்லது 20 ஆண்டுகள் ஆகும். அதன் பயனை மரம் நட்டவர்கள் அனுபவிப்பார்களா என்பது சந்தேகமே. அதனைப் பார்க்க மட்டுமே முடியும் நட்டு வைத்தவன். இந்த அனுபவத்தின் அடிப்படையிலேயே இப்பழமொழி இன்று வரை பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## 2. சமூகம் சார்ந்தது

தமிழில் பழமொழிகள் பல பெயர்களில் வழங்கப்படுகிறது. பழஞ்சொல், முதுமொழி, முதுசொல், வசனம், சொலவம், சொலவடை என்னும் பெயர்களில் மக்களிடம் வழக்கத்திலுள்ளது. இதில் வழங்கப்படும் ஒவ்வொரு பெயரும் ஒரு காரணப் பெயரே. இப்பெயரிலே அதற்கான காரணமும் தெரிகின்றது. மொத்தத்தில் பழமொழி என்பது ஒருவரின் அனுபவமொழி.

**“பழமொழிகளின் அமைப்புகள் பலவாக உள்ளன. வெறுமனே கூற்றாகவும், மறுப்பாகவும், வினாவாகவும், உரையாடலாகவும் அமைகின்றன.”[4]**

கவிஞர் வைரமுத்துவின் “கள்ளிக்காட்டு இதிகாசம்” புதினத்தில் ஒருவருக்கு அறிவுரை கூறும்போதும் இப்பழமொழிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**“உள்ளதும் போச்சுடா நொள்ளக்கண்ணான்னு ஒக்காந்திருக்கயே”**

**(க.கா.இ.ப. 21)**

கள்ளிக்காட்டு இதிகாசம் புதினத்தில் முருகாயி, பேயத்தேவருக்கும் மொக்கராசுவிற்கும் மறுமாத்தத்தைத் தூக்குச் சட்டியின் மூடியின் அடிப்பாகத்தில் தடவிவிட்டிருக்க அது கஞ்சியின் அலையில் பட்டுக் கரைந்து விடுகிறது. மூடியின் மேல்பாகத்தில் இருந்தாலும் பறவைகள் உண்டது போக மிச்சமிருக்கும். ஆனால் இன்று கஞ்சியில் விழுந்து கரைந்தே போய்விட்டது. அப்பொழுது பேயத்தேவர் மொக்கராசுவிடம் இப்பழமொழியைக் கூறுகிறார்.

**“ஒரு மாடு குடும்பங்காக்கும்; ஒன்பது மாடு குலங்காக்கும்”**

**(க.கா.இ.பக். 27-28)**

இது விவசாய வாழ்வில் வேரோடிய ஒரு நம்பிக்கையான பழமொழியாகும். ஒரு விவசாயி ஒரு மாடு வைத்திருந்தால் அம்மாடு அவன் குடும்பத்தைக் காப்பாற்றும். ஆனால் அவனிடம் ஒன்பது மாடு இருந்தால் அம்மாடுகள் அவன் பரம்பரையையே காப்பாற்றும் என்பது மாட்டின் மீது மனிதன் கொண்ட நம்பிக்கை.

**“அவனை நெருப்பென்று தள்ளவும் முடியாது இனிப்பென்று கொள்ளவும் முடியாது”**

**(க.கா.இ.ப. 33)**

சிலரிடம் கோபமும் அன்பும் சேர்ந்து காணப்படும். அவர்கள் எப்ப எந்த குணத்தோடு இருப்பார்கள் என்று தெரிந்து கொள்ளமுடியாது. அதற்காக இப்பழமொழி பயன்படுத்தப்படுகின்றது.

**“மூடி மூடி வச்சாலும் முட்டக்குள்ளயிருந்து மொசலா வரப்போகுது”**

**(க.கா.இ.ப. 46)**

“கள்ளிக்காட்டு இதிகாசம்” புதினத்தில் பேயத்தேவரின் மகளான செல்லத்தாயிக்கு இரண்டாவது திருமணத்திற்கு அவளை அலங்காரம் செய்கின்றனர். எவ்வளவு தான் அலங்காரம் செய்தாலும் இருக்கின்ற அழகு தான் இருக்கும் என்ற பொருளில் இப்பழமொழி பயன்படுத்தப்படுகிறது.

**“ஓலப்பாயில ஒண்ணுக்கிருந்தவன் மாதிரி”**

**(க.கா.இ.ப. 53)**

தொணதொணவென்று பேசிக் கொண்டிருப்பவனைப் பார்த்துப் பயன்படுத்தும் பழமொழி இது. செல்லத்தாயின் இரண்டாவது கணவனான ஒச்சுக்காளை திருமணத்திற்குப் பேயத்தேவர் போடுகிறேன் என்று கூறிய நகையைப் பற்றியே ஒச்சுக்காளை பேசிக் கொண்டிருக்கும் போது கூட்டத்தில் இருப்பவர்கள் இப்பழமொழியைப் பயன்படுத்துகிறார்கள்.

**“ஒத்துவாழவும் முடியல. ரெண்டாம் பொழப்பும் இப்படியாச்சேன்னு ஊரு வையுமே..... அதனால அத்துவாழவும் முடியல” (க.கா.இ.ப. 59)**

கணவன் செய்யும் கொடுமைகளால் செல்லத்தாயிக்கு அவனுடன் சேர்ந்து வாழவும் முடியவில்லை. இரண்டாம் திருமண வாழ்க்கையும் இப்படி ஆகிவிட்டதே என்று ஊர் மக்கள் பேசும் பேச்சிற்குப் பயந்து அவனை அத்து வாழவும் முடியவில்லை.

**“ஒழச்சா தானப்பா ஒழக்கு நிறையும்”**

**“கழுத பேஞ்சா கம்மா நெறையப் போகுது”**

**(க.கா.இ.ப. 75)**

பேயத்தேவரின் மகனான சின்னு சட்டை கசங்காமல் சம்பாதிக்க ஆசைப்பட்டுக் கஞ்சா விற்கத் தொடங்கினான். அப்பொழுது பேயத்தேவர் உழைத்த காசுதான் உடம்பில் ஒட்டும் என்று கூற அதற்கு அவன் என்னைக்கு விவசாயம் செய்து அதிகப் பணம் சம்பாதிப்பது என்று கூற இப்பழமொழி பயன்படுத்தப்படுகிறது.

**“உப்புத் தின்னா தண்ணி குடி” (க.கா.இ.ப. 124)**

பேயத்தேவரின் மகன் ஒரே மரத்தை இருவர்க்கு விற்றுவிட அவர்கள் அவனைத் தண்டிக்கும் போது இப்பழமொழியைப் பேயத்தேவர் பயன்படுத்துகிறார்.

**“நெல்லு சிந்தினா அள்ளலாம். சொல்லு சிந்தினா அள்ள முடியாது”**

**(க.கா.இ.ப. 139)**

அதாவது கோபத்தில் பேசும் போது வார்த்தைகளைப் பார்த்துப் பயன்படுத்த வேண்டும். அப்படிப் பேசிய சொற்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ள இயலாது. அந்தச் சொல் பாதிக்கப்பட்டவரின் மனதைச் சுட்டுக் கொண்டேயிருக்கும். இப்பழமொழி வள்ளுவரின்,

**“தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு”**[5]

**“செத்தும் கொடுத்தாளே சீலக்காரி”**
**“குடுக்கிற தெய்வம் கோழிக் கூட்டப் பிரிச்சுக் குடுத்திருக்கப்பா”**

**(க.கா.இ.ப. 141)**

பேயத்தேவரின் மகன் பட்ட கடனை எப்படி அடைப்பது என்று மனமொடிந்து நின்ற பேயத்தேவரிடம் அழகம்மாள் சேர்த்து வைத்தப் பணம் என்று உடைந்த கோழிக்கூட்டில் இருந்த பணத்தை முருகாயி பேயத்தேவரிடம் கொடுக்கும் போது இப்பழமொழி பயன்படுத்தப்படுகின்றது.

**“பால் திரியத் தொடங்கும் நேரம் பாத்திரத்துக்குத் தெரியாது என்பது போல பிள்ளைகள் கெடத் தொடங்கும் நேரமும் பெற்றவர்களுக்குத் தெரிவதில்லை” (க.கா.இ.ப. 155)**

பால் திரிவதை எவ்வாறு பாத்திரம் அறியாதோ அதுபோல் பிள்ளைகள் கெடத் தொடங்கும் நேரமும் பெற்றவர்களுக்குத் தெரிவதில்லை. பேயத்தேவரின் மகன் சின்னு கெட்டுப் போனதும் ஆரம்பத்தில் பேயத்தேவருக்குத் தெரியவில்லை.

**“மூங்கில் பட்டைய வச்சு முக்கி முக்கிக் கட்டிப்பாத்தாலும் நிமிரவா போகுது நாய்வாலு” (க.கா.இ.ப. 236)**

பேயத்தேவர் - முருகாயி இவர்களின் காதலை சாதியைக் காரணம் காட்டி இச்சமூகம் ஏற்க மறுக்கின்றது. ஆனால் எவ்வளவு தான் மனதிற்குக் கட்டுப்பாடுகள் போட்டாலும் அவரின் மனம் முருகாயியை நினைத்துக் கொண்டேயிருக்கிறது. அப்பொழுது இப்பழமொழி பயன்படுத்தப்படுகிறது.

**“ஈறைப் பேனாக்கி பேனைப் பெருமாளாக்குகிற கிராமம்”**

**(க.கா.இ.ப. 245)**

இப்பழமொழி சங்க இலக்கியங்களில் இடம்பெறும் அம்பல், அலர் போன்றது.

**“சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி**
**மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி**
**மறுகில் பெண்டிர் அம்பல் தூற்ற**
**........................................**
**.....................................**
**அலர் சுமந்து ஒழிக இவ் அழுங்கல் ஊரே”[6]**

சங்க இலக்கியங்களில் எவ்வாறு சிலரும் பலரும் கூடித் தலைவன் தலைவியைப் பற்றி எவ்வாறு பேசினார்களோ அதுபோலவே பேயத்தேவர் முருகாயி இவர்களின் காதலை அம்பலக்கல்லிலும் வயல்வெளியிலும் ஆண்களும் பெண்களுமாய்க் கூடிக் கூடிப் பேசுகின்றனர். அப்படி அவர்கள் பேசும் போது இப்பழமொழி பயன்படுத்தப்படுகிறது.

## தொகுப்புரை

பழமொழிகள் மக்களின் வாழ்வைப் படம்பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடிகள். இப்பழமொழிகள் அம்மக்களின் அனுபவ மொழிகள். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் கருத்துப் பெட்டகங்கள். புதினங்களில் இப்பழமொழிகள் பயன்படுத்தப்படும் போது ஆசிரியர் கூற வந்த கருத்து வாசகர்களுக்குத் தெள்ளத் தெளிவாகப் புரியவைக்க முடிகின்றது. பழமொழிகள் என்ற சொல்லே அதன் பொருளை நமக்குப் புரிய வைக்கின்றது. ஒவ்வொரு பழமொழிக்குப் பின்னும் அவர்களின் அனுபவம் என்னும் ஒரு கதை பொதிந்திருப்பதை உணர முடிகின்றது. இப்பழமொழிகளைப் புதினங்களில் பயன்படுத்துவதன் மூலம் வாசிக்கும் வாசகர்களின் கவனத்தைப் புதினங்கள் ஈர்க்கின்றன.

## அடிக்குறிப்புகள்

1. நன்னூல் - நூ.எ.14
2. ச.வே.சுப்பிரமணியன், கம்பன் இலக்கிய உத்திகள் - ப.68
3. தொல்காப்பியம், செய்யுளில் - நூ.எண்.
4. சு.சண்முகசுந்தரம், நாட்டுப்புறவியல் - ப.255
5. திருக்குறள் - கு.எ.
6. நற்றிணை - பா.எ.149